## மே – 14 – திங்கள்

**திருத்தூதர் மத்தியாஸ்**

**நம் கடவுளாகிய ஆண்டவருக்கு நிகர் யார்? திபா. 113:5**

### முதல் வாசகம் : தி.பணி 1:15 – 17, 20 – 26

அப்போது ஒருநாள், ஏறக்குறைய நூற்றிருபது சகோதரர் சகோதரிகள் ஒரே இடத்தில் கூடியிருக்கும்போது பேதுரு அவர்கள் நடுவே எழுந்து நின்று கூறியது "அன்பர்களே, இயேசுவைக் கைது செய்தவர்களுக்கு வழிகாட்டிய யூதாசைக் குறித்து தூய ஆவியார் தாவீதின் வாயிலாக முன்னுரைத்த மறைநூல் வாக்கு நிறைவேற வேண்டியிருந்தது.அவன் நம்மில் ஒருவனாய் எண்ணப்பட்டு நாம் ஆற்றும் பணியில் பங்குபெற்றிருந்தான். திருப்பாடல்கள் நூலில், "அவன் வீடு பாழாவதாக! அதில் எவரும் குடிபுகாதிருப்பாராக!" என்றும் "அவனது பதவியை வேறொருவர் எடுத்துக்கொள்ளட்டும்!" என்றும் எழுதப்பட்டுள்ளது.ஆகையால் ஆண்டவர் இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குச் சாட்சியாய் விளங்க, அவர் நம்மிடையே செயல்பட்டகாலத்தில் நம்மோடு இருந்த ஒருவரைச் சேர்த்துக் கொள்ள நாம் கூடிவரவேண்டியது தேவையாயிற்று.யோவான் திருமுழுக்குக் கொடுத்துவந்த காலமுதல் ஆண்டவர் இயேசு நம்மிடமிருந்து விண்ணேற்றமடைந்த நாள்வரை அவர் நம்மோடு இருந்திருக்கவேண்டும்." அத்தகையோருள், இருவரை முன்னிருத்தினார்கள். ஒருவர் யோசேப்பு என்னும் பெயர் கொண்ட பர்சபா. இவருக்கு யுஸ்து என்னும் பெயரும் உண்டு. மற்றவர் மத்தியா.பின்பு அவர்கள் அனைவரும், "ஆண்டவரே, அனைவரின் உள்ளங்களையும் அறிபவரே, யூதாசு திருத்தொண்டையும் திருத்தூதுப் பணியையும் விட்டகன்று தனக்குறிய இடத்தை அடைந்துவிட்டான்.அந்த யூதாசுக்கு பதிலாக யாரைத் தெரிந்தெடுக்கவேண்டும் என இந்த இருவருள் ஒருவரை எங்களுக்கு காண்பியும்" என்று இறைவனிடம் வேண்டிக்கொண்டனர்.அதன்பின் அவர்கள் சீட்டு குலுக்கினார்கள். சீட்டு மத்தியா பெயருக்கு விழவே அவர் பதினொரு திருத்தூதர்களோடும் சேர்த்துக்கொள்ளப்பட்டார்.

**பதில்பாடல் :** உயர்குடி மக்களிடையே அவர்களை அமரச் செய்கின்றார்.

### நற்செய்தி : யோவான் 15 : 9 - 17

அக்காலத்தில் இயேசு கூறியதாவதுஎன்தந்தை என்மீது அன்பு கொண்டுள்ளதுபோல நானும் உங்கள்மீது அன்பு கொண்டுள்ளேன். என் அன்பில் நிலைத்திருங்கள்.நான் என்தந்தையின் கட்டளைகளைக் கடைப்பிடித்து அவரது அன்பில் நிலைத்திருப்பது போல நீங்களும் என்கட்டளைகளைக் கடைப்பிடித்தால் என் அன்பில் நிலைத்திருப்பீர்கள். என்மகிழ்ச்சி உங்களுள் இருக்கவும் உங்கள் மகிழ்ச்சி நிறைவுபெறவுமே இவற்றை உங்களிடம் சொன்னேன்."நான் உங்களிடம் அன்புகொண்டிருப்பதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்புகொண்டிருக்கவேண்டும் என்பதே என்கட்டளை. தம்நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை.நான் கட்டளை இடுவதையெல்லாம் நீங்கள் செய்தால் நீங்கள் என் நண்பர்களாய் இருப்பீர்கள்.இனி நான் உங்களைப் பணியாளர் என்று சொல்லமாட்டேன். ஏனெனில் தம் தலைவர் செய்வது இன்னது என்று பணியாளருக்குத் தெரியாது. உங்களை நான் நண்பர்கள் என்றேன் ஏனெனில் என் தந்தையிடமிருந்து நான் கேட்டவை அனைத்தையும் உங்களுக்கு அறிவித்தேன்.நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை நான்தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன். நீங்கள் கனி தரவும், நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன். ஆகவே நீங்கள் என்பெயரால் தந்தையிடம் கேட்பதையெல்லாம் அவர் உங்களுக்குக் கொடுப்பார்.நீங்கள் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொள்ள வேண்டும் என்பதே என்கட்டளை" என்றார்.

**தியானம்:**திருத்தந்தையின் ஆணையின் பேரில் எபிரேய மொழியில் இருந்த விவிலியத்தை இலத்தீன் மொழிக்கு மொழியாக்கம் செய்தவர் புனித எரோணிமுஸ். 25 ஆண்டுகளாக ஒரு குகைக்குள் அடைத்துக்கொண்டு தன்வாழ்வை செபத்திலும் மொழி பெயர்ப்பிலும் கழித்தார். ஒரு முறை அவர் தன் செப நேரத்தில் இயேசுவை நோக்கி "இயேசுவே எனக்காக நீங்கள் பட்ட பாடுகள் கொஞ்சநஞ்சமல்ல, அவற்றிற்காக நான் என்ன கைமாறு செய்ய முடியும்?"என்று உருக்கமாக கேட்க "கடவுளைப் புகழ்ந்து பாடு, அதுவே போதும் "என்று பதில் வந்தது " நான் அதை ஏற்கனவே செய்கிறேன். என்று அவர் சொல்ல அப்படியானால்" உன் பணத்தையும், செல்வத்தையும் ஏழைகளுக்கு கொடு " என்று மீண்டும் பதில் வந்தது. அதற்கு எரோணியஸ்"அதைச் செய்ய நான் தயார் இயேசுவே, ஆனால் " உங்களுக்கு நான் என்ன கொடுப்பது? என்று கேட்க இயேசு பதில் மொழியாக "நான் மன்னிக்குமாறு உன்பாவங்களை என்னிடம் தா " என்று சொன்னாராம். உடனே எரோணிமுஸ் தன் கண்களில் நீர் பெருக்கெடுத்து ஓட "அன்பு இயேசுவே என்னிடமுள்ள அனைத்தையும் நீர் எடுத்துக்கொள்ளும் .உம்மிடமிருப்பவற்றை எனக்குத்தாரும் என்றாராம். இறைமகன் இயேசுவின் அன்பின் எல்லையற்ற தன்மையை இன்றைய நற்செய்தியும் மேற்கண்ட நிகழ்வும் நமக்கு சுட்டிக்காட்டுகின்றது. கடவுளது அன்பில் யார் நிலைத்திருக்கின்றார்களோ அவர்கள் இறைவனது அளவற்ற அன்பை அனுபவிப்பதுடன் அவர் தருகின்ற நிறை மகிழ்ச்சியையும் பெற்றுக்கொள்கின்றாரகள் .